சீர்காழி தொகுதியில் ஒரு அரசு கலைக் கல்லூரியை ஏற்படுத்துவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழியிலே மட்டுமல்ல; எந்த தொகுதியிலேயும் அரசின் சார்பிலே கலைக்கல்லூரியை அமைக்கின்ற உத்தேசம் அரசுக்கு இல்லை. இப்பொழுது இருக்கின்ற நிலைமையிலே, கலைக் கல்லூரி அவசியமில்லை என்றே அரசு கருதுகிறது. அதனாலே, அரசாங்கப் பணத்திலேயிருந்து அப்படியொரு முயற்சி எடுக்க வேண்டியதில்லை என்று நாம் கருதுகிறோம். அவ்வளவு முக்கியமான, அவ்வளவு தேவையான அளவிற்கு இந்தக் கலைக்கல்லூரி படிப்பு இல்லை என்பதையும் அரசு உணர்கிறது. ஆகவே, அரசின் சார்பில் சீர்காழியிலே மட்டுமல்ல, வேறு எந்த ஊரிலேயும் ஆரம்பிக்கிற கருத்துரு அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 574. திரு. ச. புரட்சிமணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

574—

ஆரம்ப சுகாதார மையத்தை மருத்துவமனையாக்குதல்.

***1296— திரு. ச. புரட்சிமணி :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தென்னாற்காடு மாவட்டம், பெண்ணாடம் நகரில் ஆரம்ப சுகாதார மையத்தில் 21 படுக்கை வசதி செய்து மருத்துவ மனையாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

தென்னாற்காடு மாவட்டம், பெண்ணாடம் ஆரம்ப சுகாதார மையத்தை 21 படுக்கை வசதி கொண்ட மருத்துவ மனையாக உயர்த்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இப்பொழுது இல்லை.

திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, என் தொகுதியில் பெண்ணாடம் நகரம் மிக முக்கிய நகரமாகும். அந்த நகரத்திலே இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலயத்திற்குச் சுற்று வட்டாரங்களிலிருந்து சுமாராக 30,000 மக்கள் வந்து தினமும் போகிறார்கள். அந்த ஆரம்ப சுகாதார நிலையம் 21 படுக்கை வசதி கொண்ட மருத்துவ மனையாக மாற்றப்படுமா என அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1992 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே 8 படுக்கைகள் அங்கே இருக்கின்றன. 21 ஆக உயர்த்த முடியாது என்று ஏற்கெனவே நான் தெரிவித்திருக்கிறேன். நிதி நிலைமையின் காரணமாக இப்பொழுது அதைப்பற்றிப் பரிசீலிக்க முடியாது.

திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அங்கு 8 படுக்கைகள் உள்ளன. ஆனால் இருந்தாலும் அந்த 8 படுக்கைகள் சரிவர போதாத நிலைமை உள்ளது, அதனால் இந்த ஆண்டில் இல்லை என்றாலும், அடுத்த ஆண்டிலாவது அது மேற்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அடுத்த ஆண்டு அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம். இப்பொழுது முடியாது. அடுத்த ஆண்டு நிதி நிலைமையைப் பார்த்த பின்னாலேதான் சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். பி. பரமசிவம்.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களில் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் அப்கிரேட் பி.எச்.சி. ஆக அதாவது கம்யூனிட்டி ஹெல்த் சென்டராக மாறி இருக்கின்றன என்பதனை மாண்புமிகு அமைச்சரவர்களின் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தனியாகக் கேள்வி போட்டால் விரிவாகச் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 575, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

575—

பாச்சேரியில் சித்த மருத்துவமனை.

*7894—திரு. சி. இராமசுவாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கல்வராயன்மலை பாச்சேரியில் சித்த மருத்துவமனை திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா;